பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை

06 07 2025 **SUNDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரேசிலில் இந்திய வம்சாவளியினர் அளித்த உற்சாக வரவேற்பு மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. சுதந்திரப்போராட்ட வீரரும், ஜனசங்க நிறுவனருமான ஷியாம பிரசாத் முகர்ஜியின் பிறந்த நாளையொட்டி தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.
3. நாட்டில் ஹைபர்லூப் போன்ற புதிய போக்குவரத்து முறைகள் ஊக்குவிக்கப்படும் என்று மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.
4. இந்தியா – சீனா இடையிலான ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.
5. ஆசிய இளையோர் மல்யுத்த போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<<>>>>>>

பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரேசில் தலைநகர் ரியோ டி ஜெனிரோ சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.
விமான நிலையத்தில் திரண்டிருந்த இந்திய வம்சாவளியினர் பிரதமரை வரவேற்றனர்.
இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பிரேசிலில் உள்ள இந்திய வம்சாவளியினர் இந்திய கலாச்சாரத்தை தொடர்ந்து பின்பற்றி வருவது வியப்பளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.
இந்தியாவின் வளர்ச்சியிலும் அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.
பிரேசில் அதிபர் **Lula Da Silva** அழைப்பின்பேரில் பிரேசில் சென்றுள்ள பிரதமர், இன்றும், நாளையும் பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.
அதனைத்தொடர்ந்து, அந்நாட்டில் அரசு முறைப்பயணம் மேற்கொள்ளும் பிரதமர், வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, விண்வெளி, வேளாண்மை, தொழில்நுட்பம், சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

நாட்டில் வருங்காலத்திற்கு ஏற்ற புதிய போக்குவரத்து முறைகள் ஊக்குவிக்கப்படும் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.
செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டிளித்துள்ள அவர், நாட்டின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாடுகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.
இதற்கேற்ப மின்சார பேருந்து போக்குவரத்து அதிகரிக்கப்படுவதுடன், ஹைபர்லூப், ரோப் வே, கேபிள் பேருந்து மற்றும் புதிய வகை ரயில் போக்குவரத்துகளை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.
25 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவுக்கான இருவழி நெடுஞ்சாலைகள், நான்குவழிச் சாலைகளாக மாற்றப்பட இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
நாளொன்றுக்கு 100 கிலோமீட்டர் என்ற அளவில் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

இந்தியா – சீனா இடையிலான ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் பிரிக்ஸ் நிதியமைச்சர்கள் கூட்டத்திற்கு இடையே சீன நிதியமைச்சர் திரு **'Lan Foan '**-னை சந்தித்து பேசிய அவர், உலகின் மிக வேகமாக வளரும் பொருளாதார நாடுகள் என்ற அடிப்படையில் உலகளாவிய உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் இருநாடுகளும் முன்னிலை வகிப்பதாக தெரிவித்தார்.

மேலும், மனித வளம் மற்றும் ஆழமான நாகரீக பிணைப்புகளை கொண்டுள்ள இரு நாடுகளும், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதுடன், பொருளாதார வளர்ச்சியிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தினார்.

**<<<<<<<>>>>>>**

சுதந்திரப்போராட்ட வீரரும், ஜனசங்க நிறுவனருமான ஷியாம பிரசாத் முகர்ஜியின் பிறந்த நாளையொட்டி, தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டின் கௌரவம், கண்ணியம் மற்றும் நன்மதிப்பை பேணி காப்பதற்காக தமது வாழ்க்கையை தியாகம் செய்தவர் ஷியாம பிரசாத் முகர்ஜி என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது சிந்தனைகளும், கொள்கைகளும் வளர்ச்சியடைந்த மற்றும் சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள ஷியாம பிரசாத் முகர்ஜியின் படத்திற்கு, மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா, மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா, மாநிலங்களவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஸ் சிங் உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஷியாம பிரசாத் முகர்ஜியின் சிலைக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு, தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, முன்னாள் மத்திய அமைச்சர் திரு ஹர்ஷ் வர்தன் உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் பேசிய திரு அஷ்வினி வைஷ்ணவ், இந்திய மொழிகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதில் ஷியாம பிரசாத் முகர்ஜியின் பங்களிப்பு அளப்பரியது என்றார்.

தேசிய கல்விக்கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதன்மூலம், இந்திய மொழிகளை பாதுகாத்து மேம்படுத்துவதற்கான ஷியாம பிரசாத் முகர்ஜியின் தொலைநோக்குக் கொள்கைகளை மத்திய அரசு நிறைவேற்றியிருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தொலைநோக்கு பார்வை கொண்டவரும், பாரிஸ்டருமான ஷியாம பிரசாத் முகர்ஜி, அரசியல் சட்ட நிர்ணய சபையின் மதிப்பு மிக்க உறுப்பினராக பணியாற்றியவர் என புகழாரம் சூட்டியுள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டிற்காக அயராது பாடுபட்ட அவர், நாட்டின் ஒற்றுமைக்காக தன்னலமற்ற அர்ப்பணிப்பு உணர்வுடன் ஆற்றிய பணிகள் மக்களுக்கு வழிகாட்டியாக திகழ்கிறது என்றும் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

**<<<<<<<>>>>>>**

நபிகள் நாயகத்தின் பேரன் ஹஸ்ரத் இமாம் உசேனின் தியாகத்தை நினைவு கூரும் வகையில் இஸ்லாமிய மக்களால் மொகரம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், ஹஸ்ரத் இமாம் உசேனின் தியாகம், நேர்மையை கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் தங்களது வாழ்க்கையில் எந்த நிலை ஏற்பட்டாலும், நேர்மையை உறுதியுடன் பின்பற்ற அவரது தியாகம் ஊக்கம் அளிப்பதாகவும் பிரதமர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

உலக **Zoonotic** நோய் தடுப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் நோய்களை தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

குறிப்பாக, நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ரேப்பிஸ் தடுப்பூசியை **Louis Pastur** வெற்றிகரமாக பரிசோதித்ததை நினைவுகூறும் வகையிலும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

இந்தியாவில் 2030-ஆம் ஆண்டுக்குள் ரேப்பிஸ் நோயை முற்றிலும் ஒழிக்கும் வகையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்குழுமம் தெரிவித்துள்ளது.

ஒரே சுகாதார அணுகுமுறையின் அடிப்படையில் இதற்கான பணிகளை விரைவுபடுத்த இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஆண்டுதோறும் 91 லட்சம் பேர் ரேப்பிஸ் பாதிப்புகளுக்கு உள்ளாவதாகவும், இவர்களில் 5 ஆயிரத்து 726 பேர் உயிரிழக்க நேரிடுதாகவும் அந்த குழுமம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

நடைபயிற்சியின் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில், தமிழகத்தின் ஈரோட்டில் இன்று விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

இதில், மாணவ, மாணவியர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte - ' மூர்த்தி – 37 Sec.)***

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் குடமுழுக்கு விழா நாளை நடைபெறுகிறது.

இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளதாகவும், பக்தர்கள் இன்றே திருச்செந்தூருக்கு வந்த வண்ணம் உள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 42-ஆக அதிகரித்துள்ளது.

27 பேர் மாயமாகியுள்ளதாகவும், இதுவரை 850 பேர் மீட்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் மல்யுத்த போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

கிர்கிஸ்தானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 48 கிலோ எடைப்பிரிவில் அபிஷேக் வெள்ளிப்பதக்கமும், 68 கிலோ எடைப்பிரிவில் **'Parnam '** வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

சீன தை-பேயில் நடைபெற்ற சர்வதேச பாரா சேலஞ்சர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Bhavina** தங்கப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

----------------

அஸ்தானாவில் நடைபெற்றுவரும் உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் மீனாட்சி, சாக்ஷி, ஜாஸ்மின், பூஜா ராணி ஆகியோரும், ஆடவர் பிரிவில் **‘Hitesh, Jugnoo, Abinash ’** ஆகியோரும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<<END>>>>>>>**